# சங்க இலக்கியங்களில் ஒலிக்குறிப்புச் சொற்கள்

*முனைவர் செ. முத்துமாரி*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஐன்ஸ்டீன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருநெல்வேலி

மலர்: 12

சிறப்பிதழ்: 1

மாதம்: மார்ச்

வருடம்: 2025

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.14958703

***ஆய்வுச்சுருக்கம்***

*பண்டைத் தமிழர்கள் இயற்கையைப் புரிந்துகொண்டு, இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர். இயற்கையைக் கடவுளாகவும் வணங்கி வந்தனர். கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும் உணர்வுடை மாந்தராக விளங்கிய பழந்தமிழர், தம்மைச் சுற்றி ஒலிக்கும் ஒலிகளையறிந்து அவ்வொலிகளின் வழித் தம் இயக்கத்தை அமைத்துக் கொண்டனர். ஒலிகளின் நுட்பமான வேறுபாடுகளைக் கண்டறிந்து, புரிந்து அவற்றைத் தம் பாடல்களில் பதிவுசெய்து வைத்துள்ள அவர்களின் அறிவுத்திறன் போற்றத்தக்கது. சங்கச் சான்றோர் தமது பாடல்களில் செவியாரத் துய்த்து உணர்த்திய ஒலிக்குறிப்புச் சொற்களை இவ்வாய்வு விரிவாக ஆராய்கிறது.*

**முன்னுரை**

இயற்கையோடு இயைந்த வாழ்வு பழந்தமிழருக்கானது. இயற்கை உயிர்ச்சூழல், ஒலிச்சூழல் இவற்றைப் புரிந்தும் அறிந்தும் அவர்கள் வாழ்ந்தனர். பழந்தமிழ்ப் புலவர்கள் தாம் கண்டும் கேட்டும் உணர்ந்தும் வாழ்ந்த வாழ்வியலைத் தம் இலக்கியங்களில் அவ்வாறே பதிவுசெய்தனர். குறிப்பாக தம்மைச் சுற்றி ஒலிக்கும் ஒலிகளைக் கேட்டுணர்ந்து, அவற்றைத் தம் பாக்களில் எடுத்தியம்பினர். ஒலிகள், ஒலி வேறுபாடுகள், ஒலித்தல் முறைகள், ஒலிக்குறிப்புகள் ஆகியவற்றை எவ்வாறு உணர்ந்தனரோ அவ்வாறே பதிவுசெய்தனர். இக்கட்டுரை சங்க இலக்கியங்களில் ஒலிக்குறிப்புச்சொற்கள் குறித்து ஆராய்கிறது.

**ஒலிக்குறிப்புச் சொற்கள்**

ஒலியில் ஒத்த தன்மை அல்லது ஒத்திருக்கும் தன்மையுடைய சொற்கள் ஒலிக்குறிப்புச்சொற்களாகும். இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் ஆகியன இவ்வகையைச் சார்ந்தனவாகும்.

பொருளை வெளிப்படையாக உணர்த்தாமல் குறிப்பாக உணர்த்தும் சில குறிப்புச் சொற்கள் இடைச்சொற்களாக இலக்கண நூல்களில் குறிக்கப்படுகின்றன. இவை அச்சக்குறிப்பு, விரைவுக்குறிப்புச் சொற்களாகவும் மட்டுமன்றி ஒலிக்குறிப்புச்சொற்களாகவும் வருவதுண்டு சான்றாக, இம்மென, துடுமென, ஒல்லென, இழுமென போன்றவையாகும்.

ஒருவரின் செயல் ஏற்படுத்தும் சத்தத்தை அல்லது ஒன்றின் தன்மையை மனம் உணரும் விதத்தில், அது கேட்கப்படும் விதத்திலேயே குறிக்கும் சொல் ஒலிக்குறிப்பும் சொல் எனலாம்.

**"நிகண்டுகள் இவ்வொலியை "அனுகரனவோசை" என்கின்றன."[1]**

"ஒருவர் மனதில் ஏற்படும் அல்லது நினைக்கும் எண்ணம், கருத்து முதலியவை வார்த்தையாக மாறி வெளிப்பட அவை ஏற்கும் ஒலி வடிவம்"[2] என க்ரியா தமிழ் அகராதி ஒலிக்குறிப்புச்சொல்லுக்கு விளக்கம் தருகிறது.

பழந்தமிழ்ப் புலவர்கள் இம், இமும், ஐ, ஒய், ஒல், கல், கதும், கம், குக்கூ துடும், ஞெரேர், பொரேர் போன்ற ஒலிக்குறிப்புச் சொற்களைத் தம் பாடல்களில் பயன்படுத்தியுள்ளனர்.

இம் இவ்வொலிக்குறிப்பு "விரைவு"[3] பொருளைத் தருவதாக ஒலிக்குறிப்பு அகராதி குறிப்பிடுகிறது. யாழின் இசை, வண்டின் ஒலி ஆகியவற்றின் ஒலியைப் புலவர்கள் "இம்" எனும் ஒலிக்குறிப்புச்சொல்லால் சுட்டுகின்றனர்.

**"பாணன் கையது பண்புடைச் சீறியாழ்**
**யாணர் வண்டின் இம்மென இமிரும்"**

***(நற்:30:2,3)***

**"கைவர் நரம்பின் இம்மென இமிரும்**
**மாநர் வண்டொடு, சுரும்பு நயந்து இறுத்த"**

***(குறிஞ்சி: 147,148)***

## இமும்

பண்டைப் புலவர்கள் வரி வடிவத்தில் ஒலிச்சூழலை உணர்த்த பயன்படுத்திய ஒலிக் குறிப்புச் சொற்களில் சிறப்பிடம் பெறுவது "இமும்" எனும் சொல்லாகும். "இன்னோசைக் குறிப்பு"[4] என ஒலிக்குறிப்பு அகராதி இதற்குப் பொருள் கூறுகிறது.

மெதுவாக ஒலித்தல், இனிமையாக ஒலித்தல் போன்ற ஒலிச்சூழலுக்கு "இமும்" என்னும் ஒலிக்குறிப்புச் சொற்களைப் புலவர்கள் கையாண்டுள்ளனர்.

**"இமுமென் கானல் விமுமணல் அசைஇ"**

***(அகம்:190: 15)***

**"திண்பிணி முரசம் இமுமென முழங்க"**

***(புறம்: 93: 1)***

**"இமுமென இழிதரும் அருவி" (திருமு: 316)**

**"இமுமென சும்மை இடைஇன்று ஒலிப்ப"**

***(மணி: 14:27)***

என்னும் சான்றுகளால் இதனை அறியலாம்.

## "ஐ"யென

"ஐ" என்பது வியப்புக் குறிப்பையும் துன்பக் குறிப்பையும் தரும் ஒலிக்குறிப்புச் சொல்லாகும்"[5] வாகை மரத்தின் நெற்றுகுலை, பறைபோல கேட்போர் வியக்கும் வண்ணம் ஒலிப்பதை "ஐயென ஒலிக்கும்" என அகநானூறு சுட்டுகிறது.

**"தாறுசினை விளைந்த நெற்றம், ஆடுமகள்**
**அரிக்கோற் பறையின், ஐயென ஒலிக்கும்"**

***(அகம்: 151, 9,10)***

வாகை மர நெற்றின் ஒலிக்கு பறையின் ஓசையை உவமையாகக் கூறியும் "ஐ" என்னும் ஒலிக்குறிப்புச் சொல்லாலும் அவ்வோசையைப் புலவர் உணர்த்த முற்படுவது அவர்தம் ஒலிநுட்ப அறிவுக்குச் சான்றாகும்.

## ஒய்

"இவ்வொலிக் குறிப்புச்சொல் விரைவுப் பொருளைத் தருவதாகும்."[6] ஒய் என்னும் ஒலிக்குறிப்புச்சொல் புறாவின் குரலோசை யையும், வளையல் ஓசையையும் பெருமூச்சின் ஒலியையும் குறிப்பதாக இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது.

**"அலங்கல் உலவை ஏறி, ஒய்யெனப்**
**புலம்புதரு குரல புறவுப்பெடை பயிரும்"**

***(குறுந்:79, 3,4)***

**"திருந்து கோல் எல்வளை தெழிப்ப"**

***(குறிஞ்சி: 166, 167)***

**"மையல் கொண்டும் ஒய்யென உயிர்த்தும்**
**ஏ உறு மஞ்ஞையின் நடுங்கி"**

***(முல்லை: 83,84)***

இப்பாடலடிகளில் "ஒய்" எனும் ஒலிக் குறிப்புச்சொல் விரைவுச் சூழலைக் குறித்து வருவதாக அமைந்துள்ளதைக் காணலாம்.

## ஒல்

இவ்வொலிக்குறிப்புச் சொல் "ஒல்" என்பதான ஒலித்தல் பொருளைக் குறித்துப் பாடப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

**".. ஒல்லென**
**விரி உளைக் கலிமான் தேரொடு வந்த"**

***(கலி:75: 15,16)***

***"..ஒல்லெனத்***
***திரை பிறழிய இரும் பெளவத்து"***

***(பொருந: 177, 178)***

***"ஒல்லென இமிழ் இசை மான"***

***(மதுரை: 538)***

**கல்**

சேரியில் எழும் ஆரவாரம் "கல்" என ஒலித்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன. "கல்" என்னும் ஒலிக்குறிப்புச் சொல் ஆரவாரத்தையும் பெரும் மழையின் ஓசையையும் குறிப்பதாகப் புலவர்களால் பாடப்பட்டுள்ளதைக் காணலாம்.

***"கல்லென சேரிப் புலவற் புன்னை"***

***(நற்: 63:3)***

***"கருவி வானம் துளி சொரிந்தாங்கு"***

***(பெரும்: 23,24)***

***"கல்லென துவலை தூவலின்" (நெடு:64)***

**கதும்**

"கதும்" என்னும் ஒலிக்குறிப்புச்சொல் விரைவுச் சூழலைக் குறித்து வருவதாகும்."[7]

***"சுரம் செல் கோடியர் கதுமென இசைக்கும்"***

***(நற்: 212, 3)***

***"முதுமரத்து உறையும் முரவுவாய் முதுபுள்"***

***(அகம்: 260: 12,13)***

***கதுமென குழறும்"***

என்னும் பாடல் வரிகள் இசைக்கருவியை விரைந்து இசைத்தல், கோட்டான் திடீரென குழறுதல் ஆகிய சூழல்களில் எழும் ஒலிகளைக் "கதும்" என்னும் ஒலிக்குறிப்புச் சொல்லால் உணர்த்தி நிற்பதைக் காணலாம்.

**கம்**

"சுகம்" என்னும் ஒலிக்குறிப்புச் சொல் ஓசை அடங்கும் குறிப்பை உணர்த்துவதாகும்."[8]

***"கானமும் கம்மென்றன்றே" (நற்: 154,1)***

கானகமும் "கம்மென்" ஒலி அடங்குவதாயிற்று என்பது இப்பாடல் வரியின் பொருளாகும்.

**குக்கூ**

குக்கூ என்பதற்கு, "விரைந்து கூவுதல்"[9] என்பது பொருளாகும். கோழியின் கூவலைக் குறித்த ஒலியாக குறுந்தொகையில் இச்சொல்லைக் காணலாம்.

***"குக்கூ என்றது கோழி" (குறுந்: 157:1)***

**துடும்**

இலக்கியங்களில் "துடும்" எனும் ஒலிக் குறிப்புச்சொல் நீரில் பாயும் ஒலியை உணர்த்துவதாகப் பாடப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

***"தூங்கு நீர்க் குட்டத்து துடுமென வீழும்"***

***(நற்: 280:3)***

***"நெடு நீர்ப் பொய்கைத் துடுமென விழூஉம்"***

***(ஐங்: 61:2)***

***"நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து"***

***(புறம்: 243:9)***

என்னும் பாடல் வரிகளில் காணலாகும் "துடும்" எனும் ஒலிக்குறிப்புச் சொல் ஒரு பொருளானது நீரில் பாய்வதாலும் விழுவதாலும் எழும் ஒலியை அவ்வாறே உணர்த்துவதாகப் பாடப்பட்டுள்ளதை அறியலாம்.

**ஞெரேர்**

"ஞெரேர்" என்னும் இவ்வொலிக்குறிப்புச் சொல் விரைவின் பொருட்டு எழும் ஓசைப் பொருளில் இலக்கியங்களில் ஆளப்பட்டுள்ளதைக் காணலாம்.

***"அருஞ் செலவு ஆற்றா ஆரிடை ஞெரேரெனப்***
***பரந்து படு பாயல் நவ்வி பட்டென"***

***(அகம்: 39: 15,16)***

அரிய பாலை வழியில் "ஞெரேரென" மான் எதிர்ப்பட்டதைப் போல தலைவி தலைவனிடம் எதிர்ப்பட்ட செய்தியும்,

***"மழை கண்டன்ன ஆலைதொறும் ஞெரேரெனக்***
***கழை கண் உடைக்கும் கரும்பின் ஏத்தமும்"***

***(மலை: 340,341)***

மழை போல் கரும்பின் சாறு ஓடும்படி "ஞெரேரென" கரும்பின் கணுக்களை உடைக்கும் கரும்பாலைகள் குறித்தும் இலக்கியங்கள் கூறும் செய்திகள் வழி இவ்வொலிக்குறிப்புச் சொல் விரைவின் காரணமாக எழும் ஓசைப் பொருளைக் குறித்து வருவதைக் காணலாம்.

### பொரேர்

இவ்வொலிக்குறிப்புச் சொல்லும் விரைவுப் பொருளில் வருவதாகும்.

**"வண்டு பொரேரென எழ**
**வண்டு பொரேரென எழும்"**

***(பரி:திரட்டு 1: 30,31)***

என்னும் பரிபாடல் பாடலடிகள் வண்டுகள் விரைந்து எழுந்ததைப் "பொரேரென" என்னும் ஒலிக்குறிப்புச் சொல்லால் குறிக்கின்றன.

### முடிவுரை

பழந்தமிழ்ப் புலவர்கள் இம், இழும், ஐ, ஒய், ஒல், கல், கதும், கம், குக்கூ, துடும், ஞெரேர், பொரேர் போன்ற ஒலிக்குறிப்புச் சொற்களைத் தம் பாடல்களில் பயன்படுத்தியுள்ளனர்.

### அடிக்குறிப்புகள்

1. பிங்கல நிகண்டு, நூற்: 2117
2. எஸ்.ராமகிருஷ்ணன், மு.கூ.நூ., ப.775
3. மு.சதாசிவம், ஒலிக்குறிப்பகராதி, ப.6
4. மேலது, ப.7
5. மேலது, ப.10
6. மேலது, ப.11
7. மேலது, ப.17
8. மேலது, ப.18
9. மேலது, ப.26

### துணைநின்ற நூல்கள்

1. கழகப் புலவர் குழுவினர் (1964), கழகத்தமிழ் அகராதி, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.
2. சதாசிவம் (1966), ஒலிக்குறிப்பகராதி, பாரி நிலையம், சென்னை.
3. பிங்கல முனிவர், பிங்கல நிகண்டு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி.
4. ராமகிருஷ்ணன் (1992), க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, க்ரியா வெளியீடு, சென்னை.